2015 ஆகஸ்ட் 24] [பேரவைத் தலைவர்]

பிறந்து தன்னை இளம் வயது முதல் பொது வாழ்வில் முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு மக்களுக்காகப் பணியாற்றியவரும், 1986 முதல் 1991 வரையிலும் மற்றும் 1996 முதல் 2001 வரையிலும் இரண்டு முறை செங்கோட்டை நகரமன்றத் துணைத் தலைவராக திறம்படப் பணியாற்றியவரும், ஜூலை 2011 முதல் மே 2015 வரை கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சராகவும், சுற்றுலாத் துறை அமைச்சராகவும் மற்றும் இந்து சமய அறநிலையங்கள் துறை அமைச்சராகவும் சிறப்பாகப் பணியாற்றியவரும், இனிய பண்பும், எளிமையும் தன்னகத்தே கொண்டவரும், அனைவரிடத்திலும் நட்புறவோடும், அன்போடும் பழகியவருமான திரு. பூ. செந்தூர் பாண்டியன் அவர்கள் சிறிது காலம் உடல் நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில், 11–7–2015 அன்று தனது 64 ஆவது அகவையில் மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

முற்பகல் 10–15

(இ) திரு. எம்.எஸ். விஸ்வநாதன், இசையமைப்பாளர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம்.எஸ். விஸ்வநாதன், இசையமைப்பாளர் அவர்கள் மறைவு குறித்து. மெல்லிசை மன்னர் என்றும் எம்.எஸ்.வி. என்றும் அன்புடன் அழைக்கப்படுபவரும், தமிழ்த் திரையுலகில் மாபெரும் சகாப்தமாகத் திகழ்ந்தவரும், தனது ஈடு இணையற்ற இசை வல்லமையால் தமிழ்த் திரையுலகத்தினருக்கும், குறிப்பாக, தமிழ்நாட்டு மக்களுக்கும் பெருமை சேர்த்தவரும், பழம்பெரும் இசையமைப்பாளருமான திரையுலக இசை மேதை திரு. எம்.எஸ். விஸ்வநாதன் அவர்கள் உடல் நலிவுற்று, 14–7–2015 அன்று மருத்துவமனையில் காலமானார் என்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

திரு. எம்.எஸ். விஸ்வநாதன் அவர்கள் அன்பும், அடக்கமும், எளிமையும், இறை பக்தியும் உள்ளவர். தமிழ்த் தாய் வாழ்த்தான 'நீராரும் கடலுடுத்த' பாடலுக்கு மோகன ராகத்தில் இசை அமைத்து, தமிழர்களின் இதயத்தில் குடிகொண்டு, அனைவராலும் போற்றப்படும் இசையமைப்பாளர் ஆவார்.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், திரையுலக நண்பர்களுக்கும், ரசிகப் பெருமக்களுக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த மாமனிதர்களுக்கு மரியாதை செலுத்தும்வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)

மறைந்த பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும்வகையில் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன. பேரவை மீண்டும் நாளை (25–8–2015) செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10–17 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS